

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக, மாவட்ட வழங்கல் அலுவலகத்தில், குடும்ப அட்டைதாரர்களுக்கு 2017-ம் ஆண்டிற்கு உள்தாள்கள் வைக்கப்பட்டுள்ளதை இன்று (30.12.2016) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. சின்னம்மாள் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 921/2016 நாள்: 30.12.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், குடும்ப அட்டைதாரர்களுக்கு 2017-ம் ஆண்டிற்கு உள்தாள் வைக்கப்பட்டுள்ளதை இன்று (30.12.2016) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக, மாவட்ட வழங்கல் அலுவலகத்தில், குடும்ப அட்டைதாரர்களுக்கு 2017-ம் ஆண்டிற்கு உள்தாள்கள் வைக்கப்பட்டுள்ளதை இன்று (30.12.2016) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்து தெரிவித்ததாவது:-

தமிழக அரசு, அனைத்து நியாயவிலைக் கடைகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு 2017-ஆம் ஆண்டிற்கு (01.01.2017 முதல் 31.12.2017 வரை) தமிழக அரசு உள்தாள்கள் மூலம் அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்படும் என தெரிவித்திருந்தது.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட 215 நியாயவிலைக் கடைகளுக்கு 1,54,000 உள்தாள் இணைப்புகளும், கல்குளம் வட்டத்திற்குட்பட்ட 245 நியாயவிலைக் கடைகளுக்கு 1,76,000 உள்தாள் இணைப்புகளும், தோவாளை வட்டத்திற்குட்பட்ட 59 நியாயவிலைக் கடைகளுக்கு 40,000 உள்தாள் இணைப்புகளும், விளவங்கோடு வட்டத்திற்குட்பட்ட 245 நியாயவிலைக் கடைகளுக்கு 1,70,000 உள்தாள் இணைப்புகள் என மொத்தம் 5,85,000 உள்தாள் இணைப்புகள் அனுப்பி வைக்கப்படுகிறது.

அனைத்து குடும்ப அட்டைதாரர்கள் 02.01.2017 முதல் தங்கள் பகுதி நியாயவிலைக்கடைகளில் குடும்ப அட்டைகளைக் கொண்டு சென்று உள்தாள் இணைப்புகளை பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஆய்வின் போது மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. சின்னம்மாள், மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு. சொக்கலிங்கம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.